# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - JANUARY 2026
VOL. 23 ISSUE 10 - 28 PAGES - Rs. 21/-

ஜனவரி 2026


## கர்த்தர் *உனக்கு* வீட்டை உண்டுபண்ணுவார்

(2 சாமுவேல் 7:11)



# 2026

# எழுந்து கட்டும் ஆண்டு



# இந்திய கிறிஸ்தவ நாடாளுமன்ற
## உறுப்பினர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2025





இந்திய கிறிஸ்தவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவுன்சில், 2025 டிசம்பர் 15ம் தேதி புதுடெல்லி ஜிம்கானா கிளப்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு Dr. பால் தினகரனை அழைத்திருந்தது. இதில் அரசியல் தலைவர்கள், திருச்சபை பிரமுகர்கள், போராயர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் திரு.பி. வில்சன், எம்.பி. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அனுப்பியிருந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியை வாசித்து கூட்டத்தினரை வரவேற்றார்.

"கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்" (ஏசாயா 9:6) என்ற வேத வசனத்தின் அடிப்படையில் 'சமாதானம்' என்ற தலைப்பில் Dr. பால் தினகரன், கிறிஸ்துமஸ் செய்தியை அளித்தார். மனமுடைந்தோருக்கு சேவை செய்தும், மக்களுக்கு நியாயத்தை உறுதிப்படுத்தியும் தேசத்தின் மக்களுக்குச் சேவை செய்யும்படி தலைவர்களை அவர் அழைத்தார்.

இந்த மாலை நேர கூட்டத்தில் திருமதி. பிரியங்கா காந்தியுடன் நடைபெற்ற உரையாடல் முக்கியமானதாக அமைந்தது. அதில் அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு Dr. தினகரனின் கூட்டங்களில் ஒன்றில் தான் கலந்துகொண்டதை நினைவுகூர்ந்தார். பல தலைவர்கள் தனிப்பட்டவிதத்தில் Dr. பால் தினகரன் சந்தித்து தங்கள் வாழ்த்துகளை பகிர்ந்துகொண்டனர்.

தெலங்கானா மாநில முதலமைச்சர் மாண்புமிகு ரேவந்த் ரெட்டி, இமாச்சல பிரதேச முதலமைச்சர் மாண்புமிகு சுக்விந்தர் சிங் சுகு, திரு. சசிதரூர் எம்.பி, உள்ளிட்ட தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தேச சமாதானத்தை முன்னிட்டு ஊக்கமாக ஜெபிக்கவும், அன்புடன் சமுதாயத்திற்கு சேவை செய்யவும், விசுவாசத்தோடு இணைந்து வேலை செய்யவும் அழைப்பு விடுத்து இந்தக் கூட்டம் நிறைவுற்றது.











# 2025ம் ஆண்டில் இயேசு அழைக்கிறார் ஊழியத்தினால் 21 கோடியே 50 லட்சம் மக்கள் தொடப்பட்டுள்ளனர்

## தேவனுக்கும் பங்காளர்களுக்கும் நன்றி!





ஆண்டவரின் ஊழியத்தில் அருமையான பங்காளரே,

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் 2026 புத்தாண்டு ஆசீர்வாதமும் கிருபையும் நிறைந்ததாக அமைய மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன். இந்தப் புத்தாண்டில் தேவனின் வழிநடத்துதலை தேடி அவரது சமுகத்தில் ஜெபத்துடன் காத்திருந்தபோது, ஆண்டவர் நம்பிக்கை நிறைந்த, ஆழமான ஒரு வாக்குத்தத்தத்தை உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் வெளிப்படுத்தினார். பரிசுத்த ஆவியானவர், "உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்" (ஏசாயா 58:12) என்ற வசனத்தை என் உள்ளத்தில் உணர்த்தினார்.

இந்த வேத வசனத்தை வைத்து ஜெபித்தபோது, ஆண்டவர் 2026ம் ஆண்டு, "கட்டுகிற, செழிக்கிற ஆண்டு" என்று தெளிவாக எனக்கு உணர்த்தினார். முறிந்துபோனதை சீர்ப்படுத்தவும், இழந்துபோனவற்றை மறுபடி கட்டவும், சமாதானம், தயவு, தெய்வீகச் செழிப்பு ஆகிய அஸ்திபாரங்களின்மேல் உங்களை நிலைநிறுத்தவும் விரும்புகிறார். கட்டுவதற்கு உங்கள் கைகளையும், நிற்பதற்கு உங்கள் விசுவாசத்தையும், செழிப்பதற்கு உங்களை வாழ்க்கையையும் தேவன் பெலப்படுத்தும் ஆண்டாக இது இருக்கும்.

கடந்த ஆண்டு முழுவதும் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் ஆண்டவர் செய்த மகத்தானதும் சிறந்ததுமான காரியங்களை பார்க்கும்போது என் உள்ளம் நன்றியால் நிரம்புகிறது. தேவனுடைய கிருபையாலும் மனதுருக்கத்தாலும், தேவன் பேரிலான உங்கள் தியாகமான அன்பினாலும் ஜெப கோபுரத்திற்கு வந்த ஒவ்வொருவரின் ஒவ்வொரு ஜெப விண்ணப்பத்துக்கும் பதில் கிடைத்தது; எல்லா பங்காளரும் தொடப்பட்டனர்; ஒவ்வொன்றுக்கும் சாட்சி பெறப்பட்டது; அற்புதங்கள் நடந்தன. ஜெபித்தும் கொடுத்தும் எங்களோடு நிற்பதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். உங்கள் பங்களிப்பு தேவனுடைய வல்லமையால் 21.5 கோடி மக்கள் தொடப்பட உதவியுள்ளது.

### ஜெப கோபுர ஊழியம்

**"தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (சங்கீதம் 145:18)**

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் நாடு முழுவதும் உள்ளே வருகிறவர்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்கும் ஜெப வீடுகளாக விளங்குகின்றன. 2025ம் ஆண்டில் 19 லட்சம் பேர் தனிப்பட்ட ஜெபத்தை நாடி ஜெப கோபுரங்களுக்கு வந்துள்ளனர். தேவ வல்லமையினால் அநேகரின் பாரங்கள் அகற்றப்பட்டன.

ஆண்டு முழுவதும் ஜெப கோபுரங்களில் நடத்தப்பட்ட 43,000 கூட்டங்கள் வாயிலாக 15.7 லட்சம் பேர் தேவ வார்த்தையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளனர்.

இவை தவிர இன்னும் சந்திக்கப்படாத இடங்களுக்கு கிறிஸ்துவின் நற்கந்தத்தை சுமந்து செல்கிறவையாக, 190 மிஷன் நெட்வொர்க் அமைப்புகள் உண்மையாய் செயல் படுகின்றன.

தொலைபேசி ஜெப கோபுரம்

**“என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டா ததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்” (எரேமியா 33:3)**

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள கணக்கற்ற மக்களுக்கு தொலைபேசி ஜெப கோபுரம் உதவி வருகிறது. 2025ம் ஆண்டில் மட்டும் பதிவு செய்யப்பட்ட பிரார்த்த னையை உதவியை 1.5 லட்சம் பேர் பெற்றுள்ளனர். 46 லட்சம் அழைப்புகளுக்கு நம் ஜெப வீரர்கள் ஜெபித்துள் ளனர். ஒவ்வொரு அழைப்பும் ஒரு கதையை, ஒரு முறையீட்டை ஓர் அற்புதத்தை கொண்டதாக உள்ளது.

## தேசிய ஜெப கோபுரம்

**“நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்” (எசேக்கியேல் 22:30)**

ஆண்டு முழுவதும் 200 தன்னார்வ ஜெப வீரர்கள் பல்வேறு மாநிலங்களிலுமிருந்து வந்து 8,736 மணி நேரம் 30 அணிகளாக இந்தியாவின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் செழிப்புக்காக ஜெபித்துள்ளனர்.

## ஸ்தானாபதி ஊழியம்

**“...நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து... சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன” (ஏசாயா 52:7)**

1,250 ஸ்தானாபதிகள் 160 கௌரவ ஸ்தானாபதிகள் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை சந்தித்து ஜெபித்து தாங்கியுள்ளனர். இந்த ஸ்தானாபதிகள் ஊழியத் தின் அடித்தளத்தை ஸ்திரமாக்கும் தூண்களாக விளங்கு கின்றனர்.

## தொலைக்காட்சி ஊழியம்

**“ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்தப்படுத்து கிறவர்களின் கூட்டம் மிகுதி” (சங்கீதம் 68:11)**

தேவனுடைய கிருபையால் இந்தியா முழுவதுமுள்ள வீடுகளுக்கு குடும்பங்களுக்கு தமிழ், மலையாளம், இந்தி, தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் ஒளிபரப்பா கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆசீர்வாதமாக அமைந்து வருகின்றன. Colors Rishtey மற்றும் Colors Super உள்ளிட்ட பல அலைவரிசைகளில் ஒளிபரப் பாகும் நிகழ்ச்சிகள் 12 லட்சம் பேரை தொட்டுள்ளன.

## பாடல்கள் மூலம் ஊழியம்

**“கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தி ரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்” (சங்கீதம் 96:2)**


தமிழ், இந்தி, தெலுங்கு மொழிகளில் வெளியான ஆராதனை பாடல்கள் 24 லட்சத்துக்கும் அதிகமானோரை தொட்டுள்ளன. கடந்த ஆண்டில் வெளியான 'ஆசீர்வாத மழை', 'கர்த்தர் நம் சார்பில்', 'கர்த்தரை ஸ்தோத்தரி', 'விசுவாசம்' போன்ற பாடல்கள் சுகம், ஆறுதல், தைரியம் அளித்து மக்களை தேவ சமுகத்திற்குள் இழுத்து, அவர்கள் விசுவாசத்தை பெலப்படுத்தின.

## டிஜிட்டல் மீடியா ஊழியம்

**“இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்திய டைந்து மேற்கொண்டது” (அப்போஸ்தலர் 19:20)**

இந்த ஆண்டு அனைத்து சமூக ஊடக தளங்கள் மூலமாகவும் 20 கோடி பார்வையாளர்களை சந்திக்கும் படி ஆண்டவர் விரிவாக்கியுள்ளார். கீழே கொடுக்கப்பட் டுள்ள புள்ளிவிவரங்கள் இயேசு அழைக்கிறார் சமூக ஊடகம் இன்றைய தலைமுறையினர் மத்தியில் எத்தகைய வரவேற்பை பெற்றுள்ளது என்பதை அறிய உதவுகிறது.

யூடியூப் பார்கைள்: 6.7 கோடி; ஃபேஸ்புக் : 11 கோடி; இன்ஸ்டாகிராம் இம்ப்ரஷன்: 2 கோடி



## பத்திரிகை ஊழியம்

**“உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர் களாக்கும்” (சங்கீதம் 119:130)**

இயேசு அழைக்கிறார் பத்திரிகை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் மற்றும் குஜராத்தி மொழிகளில் வெளியாகிறது. 3.25 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் அச்சுப் பிரதிகளையும் டிஜிட்டல் பிரதிகளையும் வாசித்து ஆசீர்வாதம் பெறுகின்றனர்.

## எஸ்தர் ஜெபக்குழு ஊழியம்

**“இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்” (மத்தேயு 18:20)**

415 குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன; 165 குழுக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் 2225 எஸ்தர் ஜெபக் குழுக்கள் உள்ளன. 1,575 எஸ்தர் ஜெபக் குழுக்கள், 360 வாலிப பெண்கள் எஸ்தர் ஜெபக் குழுக்கள், 155 ஜூனியர் எஸ்தர் ஜெபக்குழுக்கள், 135 தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுக்கள் உள்ளன.

## எக்காள ஜெபக் குழு

**“என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும்... இருக்கக்கடவது.” (சங்கீதம் 141:2)**

கடந்த ஆண்டில் பகல் நேர ஜெபம் உள்ளிட்ட பல ஜெபங்களில் 18,850 பேர் இணைந்து ஊக்கமாக ஜெபித் துள்ளனர். ஜெபிக்கும்படி மக்களின் இருதயங்களை




இணைக்கும் ஆண்டவரை ஸ்தோத்திரிப்போம்.

### சிறுவர் ஊழியம்

**“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்” (மத்தேயு 19:14)**

டைனமிக் சிறுவர் முகாமில் 20,400 சிறுபிள்ளைகள் பங்கேற்று ஒவ்வொரு வேளையிலும் தேவ அன்பையும் சந்தோஷத்தையும் வாழ்வை மாற்றும் வல்லமையை யும் அனுபவித்தனர்.

### உணவு விநியோகிக்கும் ஊழியம்

உபவாச பிரார்த்தனைக்கு பின் 2.44 லட்சம் பேர் உணவை வாங்கி ஆசீர்வாதம் பெற்றுனர்.







### கடித ஊழியம்

**“அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்” (ஏசாயா 65:24)**

2025ம் ஆண்டில் ஊழியத்திற்கு கடிதங் கள், மின்னஞ்சல் மூலம் வந்த 7 லட்சம் ஜெப விண்ணப்பங்களுக்கு பதில் அனுப்பப்பட்டுள் ளது.அனைத்து சமூக ஊடகங்களிலும் 60 லட்சம் பின்னூட்டங்கள் வந்துள்ளன.

### யூடர்ன் ஊழியம்

**“நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டி கரை நினை” (பிரசங்கி 12:1)**

யூடர்ன் இன்னிசை இரவுகள், வாலிபர் ஆசீர்வாத கூட்டங்கள், கிளப்கள், தொலைக் காட்சி மற்றும் இணையவழி நிகழ்ச்சிகள் மூலம் 30,000 வாலிபர்கள் தொடப்பட்டனர். இந்தக் கூடுகைகள் வாயிலாக ஆயிரக்கணக்கானோர் ஜெபத்தை, வழிகாட்டுதலை, நோக்கத்தைப் பெற்றுக்கொண் டுள்ளனர்.

### திருச்சபைகளுக்கு உதவி

**“அவராலே சரீரம் முழுதும்.. அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.” (எபேசியர் 4:16)**

கடந்த ஆண்டில் 810 போதகர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. 23 ஆலயங்கள் புதிதாக கட்டப்பட்டன. நாம் இணைந்து, ஒரு நேரத்தில் ஒரு பரிசுத்த ஸ்தலமாக, இந்தியாவின் ஆவிக்குரிய அஸ்திபாரங்களைப் பெலப் படுத்துவோம்.

கடந்த ஆண்டு தேவன் செய்த மகத்தான கிரியைகளுக் கான அவருக்கே சகல மகிமையும் உண்டாவதாக. 2026ம் ஆண்டு நாம் இணைந்து தேவ மகிமைக்காக செய்யக்கூடிய ஆச்சரியமான காரியங்களைச் செய்யும் படி எதிர்நோக்குகிறேன். “எல்லாம் உம்மால் உண்டா னது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்” (1 நாளாகமம் 29:14)

### எழுந்து கட்டும் 2026ம் ஆண்டுக்கு ஊழியத்துக்குரிய திட்டங்கள்

அன்பு பங்காளரே, நாம் 2026 புத்தாண்டுக்குள் அடியெடுத்து வைக்கும்போது, நிதானித்து தாம் செய்த நன்மைகளை நினைவுகூரும்படி ஆண்டவர் அழைக் கிறார். வேலை, வருமானம், ஆரோக்கியம், குடும்பம், அனுதின பாதுகாப்பு என்று நாம் அனுபவிக்கும் அனைத்து ஆசீர்வாதங்களையும் அவரது கரத்திலிருந்தே ஈவாக பெறுகிறோம். வேதம், “பரலோகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்” (யோவான் 3:27) என்று கூறுகிறது.

யோவான் 6ம் அதிகாரத்தில் ஒரு சிறுபையன், தான் கொண்டு வந்திருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீனையும் இயேசுவின் கரங்களில் கொடுத்தான். போதாது என்று காணப்பட்ட அவை, அற்புதம் நடந்த பிறகு ஐயாயிரம் பேரை போஷிப்பதற்கு உகந்ததாக பெருகியது. நமக்கு தேவன் தந்திருப்பவற்றில் சிறிய பங்கை நாம் கொடுக்கும்போது அவர் அதை நினைத்துப்பார்க்காத அளவு பெருகப்பண்ணுகிறார்.

இந்த ஆண்டு, தொலைபேசி ஜெப கோபுரத்தின் வாயிலாக 50 லட்சம் பேர், ஜெப கோபுரங்கள் வாயிலாக 30 லட்சம் பேர், கடிதங்கள், மின்னஞ்சல்கள் வாயிலாக 10 லட்சம் பேர், நாடு முழுவதும் 10,000 ஜெப வீரர்களை எழுப்புதல், வீடியோ செய்திகள், ஜெபங்கள், சாட்சிகளைக் கொண்டு ஆயிரக்கணக்கான ரீல்கள், பிளாக்குகள் போன்ற சமூக ஊடக செயல்பாடுகளை தயாரித்தல், திருச்சபைகள், தனிப்பட்ட மற்றும் ஊழிய தேவைகளைத் தாங்குவதன் மூலம் 1,500 போதகர்களுக்கு ஆசீர்வாதம்

**கடந்த ஆண்டு தேவன் செய்த மகத்தான கிரியைகளுக்கான அவருக்கே சகல மகிமையும் உண்டாவதாக. 2026ம் ஆண்டு நாம் இணைந்து தேவ மகிமைக்காக செய்யக்கூடிய ஆச்சரியமான காரியங்களைச் செய்யும்படி எதிர்நோக்குகிறேன். “எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்” (1 நாளாகமம் 29:14)**




அளித்தல், லட்சக்கணக்கான மக்களுக்கு இரட்சிப்பு, விடுதலை, ஆறுதல் அளிக்கும்வண்ணம் வேண்டுதல் செய்வதற்கு பிரார்த்தனை திருவிழாக்களை நடத்துதல் மூலம் 25 கோடி மக்களை ஊழியத்தின் வாயிலாக சந்திப்பதற்கு ஜெபத்துடன் எதிர்நோக்குகிறோம்.

உங்களைப் போன்ற அருமையான பங்காளர்களின் உதாரத்துவமான ஆதரவால் இந்த எல்லா ஊழியங்களும் எல்லா மக்களுக்கும் இலவசமாக செய்யப்பட்டு வருகிறது; இனிமேலும் தொடரும்.

ஆகவே, உங்கள் ஒருநாள் / ஊதியத்தில் பத்தில் ஒரு பங்கை தேவனுடைய வேலைக்காக அவரது கரத்தில் அளிக்கும்படி பொருத்தனை செய்ய உற்சாகப்படுத்துகிறேன்.

**மற்றவர்களை ஆசீர்வதிக்கிறவர்களை எவ்வாறு தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதைக் குறித்த ஒரு சாட்சி:**

## தேவனை கனம்பண்ணியதற்காக வந்த கனம்

என்னுடைய நேர்முகத் தேர்வுக்கு முன்பாக ஜெப விண்ணப்பத்தை சமர்ப்பித்தேன். தேவன், எதிர்பார்க்காத வாசலை எனக்குத் திறந்தார். முன்பு என்னை நிராகரித்த அதே கல்லூரியில் நான் நர்சிங் பிரிவுக்கு (GNM & B.Sc. Nursing) முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளேன். முன்பு நான் வெட்கப்பட்ட இடத்தில் என்னை தலைமை பொறுப்பில் அமர்த்தியதின் மூலம் ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியுள்ளார். என்னுடைய முதல் ஊதியத்தைக் காணிக்கையாக கொடுப்பதன் மூலம் தேவனுக்கும், Dr. பால் தினகரனுக்கும், ஜெப வீரர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். தேவனுக்கே சகல மகிமையும் உண்டாவதாக. **- பாவ்னா ஷீதல் முகர்ஜி.**

ஆம், நீங்கள் அவர் அளித்தவற்றைக் கொண்டு அவரை கனம்பண்ணும்போது, அவர் திரும்ப உங்களைக் கனம்பண்ணுவதாக வாக்குக்கொடுக்கிறார். 2026 கட்டுகிற, செழிக்கிற ஆண்டாகும். நீங்கள் விதைக்கிறதின் மூலம் ஜெப கோபுரங்கள் கட்டப்படும்; நற்செய்திக்கு தாங்கப்படும்; கோடிக்கணக்கானோர் தொடப்படுவர்; உங்கள் வாழ்வில் தெய்வீக தயவின் வாசல்கள் திறக்கும். தேவன்தாமே உங்களைத் தொடர்ந்து ஆசீர்வதித்து, ஆசீர்வாதமாக இருக்கும்படி காப்பாராக.

உங்களுக்காக ஜெபிக்கும் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.



**நன்றியதலுடன் விதைத்திடுங்கள்... வரும் ஆண்டில் தேவ தயவை அனுபவியுங்கள்...**

2026 புத்தாண்டில் என் ஸ்தோத்திர காணிக்கை

- ❑ ஸ்தோத்திர காணிக்கையாக என் ஒருநாள் வருமானமான ரூ…………………/- வழங்குகிறேன்.
- ❑ ஸ்தோத்திர காணிக்கையாக என் ஊதியத்தில் பத்தில் ஒரு பங்கான ரூ…………………/- வழங்குகிறேன்.
- ❑ ஸ்தோத்திர காணிக்கையாக ஆண்டு முழுவதும் மாதந்தோறும் ரூ…………/- நன்கொடை வழங்குவதாக பொருத்தனை செய்கிறேன்

ஸ்தோத்திர காணிக்கையாக என்னுடைய லாபத்தில்………… பங்குகளான ரூ…………/- கொடுக்கிறேன்.

உங்கள் ஜெப விண்ணப்பங்களை தயங்காமல் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். Dr. பால் தினகரனும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் உள்ள ஜெப வீரர்களும் உங்கள் அனைத்து தனிப்பட்ட ஜெப விண்ணப்பங்களுக்காகவும் ஜெபிப்பார்கள்.

ஜெப கோபுர முகவரி: Dr. பால் தினகரன், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.
மின்னஞ்சல்: paul@jesuscalls.org
QR codeஐ ஸ்கேன் செய்யவும்

அன்பானவர்களே,

“கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார்” (2 சாமு. 7:11) என்ற வல்லமையான வாக்குத்தத்தத்தை இந்த ஆண்டுக்கென தேவன் என் உள்ளத்தில் போட்டார். தேவன் தாவீதிடம், “நான் உன் வீட்டைக் கட்டுவேன்” என்று கூறுகிறார். தேவன், தமக்கு ஒரு வீட்டைக் கட்டுவதற்காக திரளான ஐசுவரியத்தை தாவீது திரட்டியிருப்பதாகக் கூறி, “என்றென்றைக்கும் நிற்கும்படியாக உனக்கு ஒரு வீட்டை உண்டுபண்ணுவேன்” என்று மகா பெரிய வாக்கைக் கொடுக்கிறார். தேவன் மேலும் தொடர்ந்து, “உன் வீட்டைக் கட்டுவேன்; உன் பிள்ளைகளின் வாழ்வை கட்டுவேன்; உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதங்களை அளிப்பேன்; எல்லோரும் சமாதானமாக வாழும்படி செய்வேன்; ஆகவே, தைரியமாயிரு” என்று கூறுகிறார். இன்றைக்கும் இஸ்ரேல் நாடு தன் தேசிய கொடியில் தாவீதின் நட்சத்திரத்தை வைத்திருப்பதை நீங்கள் பார்க்கலாம். அந்த தேசத்தின் மக்கள், “தாவீது எங்கள் தகப்பன்” என்று அறிக்கையிடுகிறார்கள். நூற்றாண்டுகள் கடந்தாலும், இன்னும் தாவீதின் வீடும் வம்சமும் தேவனுடைய கரத்தால் திடமாக கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தேவன் உங்கள் குடும்பத்தையும் ஸ்திரமாக கட்டுவார். உங்கள் குடும்பம் விழுந்து போகுமோ என்று பயத்தோடு இருக்கலாம், உங்கள் எதிர்காலம் நிச்சயமில்லாததாக இருக்கலாம். இல்லையெனில், உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் ஆபத்தில் இருக்கக்கூடும். ஆனால், சத்தியம் என்னவெனில், உங்கள் குடும்பம் இயேசுவுக்குள் கட்டப்பட்டிருப்பதால் ஒன்றும் அழிக்கப்படாது. அவர் இன்று, “உன் வீட்டை நான் கட்டுவேன்” என்று கூறுகிறார். இயேசுதாமே, அது எந்த மனுஷனாலும், எந்தச் சூழ்நிலையிலும் அழிக்கப்படாது என்று கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் தேவன் இந்த வாக்குத்தத்தத்தை உரைத்து அதை தாவீதுக்கு நிறைவேற்றினார். இன்று இயேசு உங்கள் வாழ்வில் நிச்சயமாகவே அதை நிறைவேற்றுவார்.

### இந்த ஆண்டு தேவன் எப்படி உங்கள் வீட்டைக் கட்டுவார்?

தேவன் உங்களை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும், தாம் வாசம்பண்ணும், அவருடைய சமுகத்தாலும் சமாதானத்தாலும் செழிப்பினாலும் நிறைந்திருக்கும் தன் சொந்த மாளிகையாக உண்டுபண்ணுவார்.

### இயேசுவை அஸ்திபாரமாகக் கொண்ட மாளிகையாகக் கட்டப்படுதல்

தேவன் அஸ்திபாரத்தை, வெளிப்படுத்தி விளக்க ஆரம்பிக்கிறார். அஸ்திபாரம் எது வேதம், “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல்




Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org
Pauldhinakaranofficial

வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது'' (1 கொரிந்தியர் 3:11) என்று கூறுகிறது.

பெரும்பாலும் நம்முடைய பூமிக்குரிய வம்சத்தை அடையாளமாக கூறுகிறோம். ''நான் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன்(ள்)'' என்றோ, ''நாங்கள் தினகரன் குடும்பத்தினர்'' என்றோ கூறலாம். அதேபோல உங்கள் தாத்தாவையோ, பூட்டனையோ அவர்களது திறமைகளையோ நீங்கள் சொல்லலாம். ஆனால் அவர்களில் யாரும் இன்று உயிரோடு இருக்கமாட்டார்கள். ஆனால், மங்காத ஓர் அஸ்திபாரம், தலைமுறைகளாய் நிற்கும் ஓர் அஸ்திபாரம் நமக்கு இருக்கிறது. அந்த அஸ்திபாரத்தின் பெயர் இயேசு. அவர், ''நான் என்றென்றைக்கும் இருப்பேன்'' என்று கூறுகிறார். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியாக திரியேக தேவன், ''நான் என்றென்றைக்கும் இருப்பேன். நான் நானே உனக்கும் உன் குடும்பத்துக்கும் அஸ்திபாரம்'' என்று கூறுகிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஜப்பானை கடும் பூமியதிர்ச்சி தாக்கியது. ஒரே ஒரு செல்வந்தனின் மாளிகை தவிர மற்ற எல்லா கட்டடங்களும் விழுந்து போயின. அந்தக் கட்டடம் மட்டும் எப்படி நிற்கிறது என்று ஆராய்ச்சி செய்வதற்காக உலகெங்கும் இருந்து அறிவியல் அறிஞர்கள் வந்தனர். மூலைக்கல்லின் அருகே தோண்டிய போது, அவர்கள் பல பொற்காசுகளையும், ஒரு மண்டையோட்டையும், மீதியிருந்த எலும்புகளையும் கீழே கண்டனர். அவர்களின் ஆராய்ச்சி ஜப்பானின் பழமையான ஒரு பண்பாட்டை கண்டுபிடித்தது. ஒரு செல்வந்தன் மாளிகையை கட்டும்போது, தன்னுடைய சிறந்த வேலைக்காரனை அழைப்பான். மூலைக்கல் வைக்கப்படும் இடத்தில் அவனை படுக்கவைத்து, அவன்மேல் அஸ்திபாரத்தை போடுவான். அந்த வேலைக்காரன், தன் மனைவியையும் பிள்ளைகளையும் தைரியமாக மனமுவந்து விட்டு விட்டு செல்லும்படி எல்லோருக்கும் மேற்பட்டவனாக கனப்படுத்தப்படுவான். அவனது தியாகத்தின்மேல் அந்த மாளிகை கட்டப்படும். இந்த சரித்திரப்பூர்வமான நடைமுறையே குறிப்பிட்ட அந்தக் கட்டடம் பூமியதிர்ச்சியில் நிலைத்திருந்ததற்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டது.

இயேசுவை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கும் நீங்கள் அசைக்கப்பட முடியாத மாளிகையாக மாறுவீர்கள்

அஸ்திபாரத்துக்குக் கீழே இருப்பது ஒரு மனுஷனல்ல; தேவனாகிய கர்த்தரே இயேசு என்ற பெயரில் ஊழியனாக உருவெடுத்து வந்து தம்மையே பலியாகக் கொடுத்தார். பாவமறியாத அவர் தம்மைதாமே தாழ்த்தி, நம்முடைய பாவங்கள் அகற்றப்பட்டு, நாம் மகிமையான மாளிகையாக கட்டப்படும்படி தம் ஜீவனை பலியாகக் கொடுத்தார்.

தேவன் உங்கள் அஸ்திபாரமானால், அவர் உங்கள் வாழ்க்கையை உயர்த்தி, ஒருபோதும் அசைக்கப்படாத மாளிகையாக அதை ஸ்தாபிப்பார். ''என் வாழ்க்கையே உடைந்துபோனது'' என்று கூறுகிறீர்களா? தைரியமாயிருங்கள். இயேசு தாமே நிச்சயமான அஸ்திபாரமாக இருந்து உங்களை மாளிகையாக கட்டியெழுப்புவார். எந்தத் தீங்கும் உங்களை அணுகாது. இயேசுவின்மேல் கட்டப்பட்ட வாழ்க்கையை அசைக்கமுடியாது. இதனாலேயே நம் வாழ்க்கை ஸ்திரமாக நிற்கிறது.

### பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணும் மாளிகையாகக் கட்டப்படுங்கள்

''**அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்**'' (எபேசியர் 2:20,22) என்று வேதம் கூறுகிறது. எவ்வளவு சிறந்த சத்தியம் இது!

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய வாசஸ்தலமாக மாறுகிறோம். தேவனாகிய கர்த்தர் இறங்கி நமக்குள் வாசம்பண்ணுகிறார். அவர் உங்களுக்குள் இருக்கிறார். இதை விசுவாசிக்கிறீர்களா? உலகத்தில் எதைக் காட்டிலும் உங்களுக்குள் இருக்கிறவர் பெரியவராயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவராகிய மிகப் பெரியவர் உங்களுக்குள் வாசம்பண்ணுவதால் உங்களை மாளிகையாக்குகிறார். வேதம், ''**ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்**'' (ரோமர் 8:26) என்று கூறுகிறது. நாம் எவ்வளவு வலிமையானவர்களாக, திறனுடையவர்களாக இருந்தாலும், பெலவீனங்களை, போராட்டங்களை, கவலைகளை, இழப்புகளை, பாடுகளை எதிர்கொள்ளவேண்டிய உலகிலேயே வாழ்கிறோம். ஆனாலும், தேவன் நம்மை மாளிகையாக்கி, பரிசுத்த ஆவியின் ஆதரவை தருவதற்குத் தெரிந்தெடுத்துள்ளார். பரிசுத்த ஆவியானவரே நம் பெலவீனங்களை அகற்றி, நம்மை பெலப்படுத்துகிறவராயிருக்கிறார். ஆகவே, தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் உங்களை நிரப்பப்போகிறார். இயேசு, அஸ்திபாரமாகிய தம் மீது பரிசுத்த ஆவியின் மாளிகையாக உங்களைக் கட்டியெழுப்புவார். பெலவீனங்கள் வரலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காக யுத்தம் செய்வார். வேதம், ''**வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்**'' (ஏசாயா 59:19) என்று கூறுகிறது.




யாரோ ஒருவர் உங்கள் வீட்டுக்குள் வந்து தங்கள் பொருளை வைத்துச் செல்லவோ, கட்டிலை போடவோ அல்லது சுவரைக் கட்டவோ நீங்கள் அனுமதிப்பீர்களா? அவ்வாறே, பெலவீனங்களோ, சாத்தானோ உங்கள் வாழ்க்கைக்குள் புகும்போது, அவனை எதிர்க்கும் பெலன் உங்களுக்கு இல்லாமற் போகலாம். அதற்காகவே இயேசுவின் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார்; நம் பெலவீனங்களில் அவர் நமக்கு உதவி செய்வார்; தற்காப்பார்; நம்மை பெலப்படுத்துவார்; தம் வாசஸ்தலத்தை பரிசுத்தமாக காப்பார்.

தம்மோடு பேசும்படி தேவன் நமக்குப் புதிய பாஷைகளைக் கொடுக்கிறார் என்று வேதம் கூறுகிறது (1 கொரிந்தியர் 14:15). நாம் அவரை விசுவாசிக்கும்போது, நவமான பாஷைகளைப் பேசுவோம் என்று இயேசு கூறுகிறார் (மாற்கு 16:16-18). நவமான பாஷைகள் உங்கள்மேல் வரும்போது, பழைய சர்ப்பத்தின் கிரியைகள் அழிக்கப்பட்டு, உங்கள் வாழ்க்கை புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு பரிசுத்த ஆவியானவர் தேவை. "நான் தேவனுடைய பிள்ளையாகிவிட்டேன்; என்னை அர்ப்பணித்துள்ளேன். ஆகவே, நான் என்றென்றைக்கும் பரிசுத்தமாக இருப்பேன்" என்று நாம் கூற முடியாது. தேவனுடைய ராஜ்யத்திற்குள் உபத்திரவங்களின் வழியே பிரவேசிக்கவேண்டும். பல பாடுகளின் வழியாகவே அதனுள் பிரவேசிக்கிறோம். பாடு வரும்போது, அநேகவேளைகளில் நாம் மனம் சோர்ந்து, "தேவன் எங்கே?" என்று கேட்கிறோம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்போது, அவர் நமக்குள் எழும்புகிறார். அவர் நவமான பாஷைகளில் நம்மை பேசும்படி செய்து, புதிய சூழ்நிலையை உருவாக்குகிறார்; புதிய பாதையை திறக்கிறார்; "நான் இயேசுவின் மகன் / மகள்" என்று தைரியமாக கூறும்படி புது பெலனை தருகிறார்.

டெல்லியைச் சேர்ந்த ஷர்மிளா சாட்டார்ஜி என்ற சகோதரியின் சாட்சியை பகிர்ந்துகொள்கிறேன்: என் கணவர் இறந்த பிறகு, என் மகள் பராமா நேஹா மிகவும் மனமுடைந்துபோனாள்; குடிப்பழக்கத்திற்கு அடிமையானாள். அவளுக்குத் திருமணமான பிறகும், மகிழ்ச்சியில்லாமலே இருந்தாள். ஓராண்டுக்குள் அவள் குடிப்பழக்கம் அதிகரித்தது. காலையிலிருந்து இரவு வரை வேலைக்கு செல்ல முடியாமல் குடித்துக்கொண்டே இருப்பாள். ஆனால் நான் தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; பாவிகளாகிய நமக்காக தம் ஜீவனையே கொடுத்தார் என்பதை அறிந்து விசுவாசத்தை பற்றிக்கொண்டிருந்தேன். நான் கொல்கத்தாவில் வசித்தேன். அவள் இயேசு அழைக்கிறார் டெல்லி ஜெப கோபுரத்திற்குச் சென்றால் ஆண்டவர் நிச்சயமாக அவளை விடுவிப்பார் என்று நம்பி டெல்லிக்கு வந்தேன். 2025 பிப்ரவரி 9ம் தேதி நேஹாவை ஜெப கோபுரத்திற்கு அழைத்து வந்தேன். அவளது விடுதலைக்காக நாங்கள் ஊக்கமாக ஜெபித்தோம். அவளை அற்புதவிதமாக மதுப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவித்தார். இப்போது அவள் அப்பழக்கத்திலிருந்து முற்றிலும் மாறி, அவள் அலுவலகத்தில் துணை தலைவர் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறாள்.

தேவன் உங்களையும் தமது ஆவியினால் நிரப்புவார். உங்களுக்கு எதிராக எந்த சோதனை, பெலவீனம் வந்தாலும் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார். உங்கள் அஸ்திபாரமாக இயேசு இருக்கும்போது, உங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணும்போது, தாம் தங்கும் மாளிகையாக தேவன் உங்களை மறுரூபமாக்குவார். இன்றைக்கு அந்தக் கிருபையை ஆண்டவர் உங்களுக்குத் தருகிறார்.

## தேவ வார்த்தையினால் மாளிகையாகக் கட்டப்படுதல்

இயேசுவாகிய அஸ்திபாரத்தின்மேல் தேவன் எப்படி உங்களைக் கட்டுகிறார் அவர் ஜீவனுள்ள கற்களால் உங்கள் வாழ்க்கையைக் கட்டுகிறார். "**ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்**" (1 பேதுரு 2:5) என்று வேதம் கூறுகிறது.

பழங்கால கட்டடங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உறுதியாக நின்றன. ஆனால், இப்போது கட்டப்படும் கட்டடங்கள் நாற்பது ஆண்டுகள் தாக்குப் பிடிப்பதும் கடினமாக உள்ளது. பூமிக்கு மட்டுமல்ல, பரலோகத்திற்கும் நீங்கள் உரியவர்களாக இருக்கிறபடியால் நீங்கள் எப்போதும் ஸ்திரமாக நிற்கிறீர்கள். ஆண்டவர் வாசம்பண்ணும்படி தேவன் உங்களை ஜீவனுள்ள கற்களைக்கொண்டு மாளிகையாகக் கட்டுகிறார். நீங்கள் அந்த ஜீவனுள்ள கற்கள் என்று வேதம் கூறுகிறது. உங்கள் சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் ஆவிக்குரிய வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் ஜீவனுள்ளதாயிருக்கும். வியாதிப்பட்டவர்களுக்காக, குறிப்பாக தேவ ஊழியர்களுக்காக நான் ஜெபிக்கும்போதெல்லாம், "ஆண்டவரே, இவர்கள் சரீரம் உம்முடைய ஆலயமாயிருக்கிறது. இவர்கள் உம்மை தங்களுக்குள் சுமந்து செல்கிறார்கள். ஆகவே, உம் ஜீவன் அவர்களுக்குள் இருக்கிறது. இந்த ஜீவன் அவர்களுக்குள் எழும்புவதாக" என்று ஜெபிப்பேன். இந்த மக்கள் ஜீவனுள்ள கற்களாயிருக்கிறார்கள். இயேசு, "நானே ஜீவனாயும் உயிர்த்தெழுதலாயும் இருக்கிறேன்" என்று கூறுகிறார். இந்த ஜீவன் எப்படி வருகிறது? இயேசு, "**நான்**

**உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**'' (யோவான் 6:63) என்று கூறுகிறார். ஜீவன் தேவனுடைய வார்த்தையின் வழியாக வருகிறது. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை உங்களுக்குக் காண்பிக்கிறார். அந்த வார்த்தையை நீங்கள் உரைத்து ஜெபிக்கும்போது, ஜீவன் உங்களுக்குள் வருகிறது. மரணத்திற்குத் தொடர்பான காரியங்கள் அகற்றப்படுகின்றன. நீங்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் மாளிகையாக இருக்கிறீர்கள்.

இருபத்து நான்காம் வயதில் நான் முதன்முறையாக அமெரிக்காவுக்குச் சென்றபோது, புற்றுநோயினால் மரித்துக்கொண்டிருந்து ஒரு பெண்ணுக்கான ஜெபக் கூட்டத்தில் எதிர்பாராதவிதமாக பேசும்படி அழைக்கப்பட்டேன். அவர்கள் பாடிக்கொண்டிருக்கும்போது பயம் என்னை நிறைத்தது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை குணப்படுத்தும் என்ற வேத பகுதியை (யாக்கோபு 5:14,15) வாசிக்கும்படி என்னை வழிநடத்தினார். தேவனுடைய வார்த்தையின்படி, அந்த பெண்மணி மேல் எண்ணெய் பூசி ஜெபிக்கும்படி நான் மூப்பர்களைக் கேட்டுக்கொண்டேன். நாங்கள் கீழ்ப்படிந்து தேவனை துதித்தபோது, விசுவாசம் அந்த அறையை நிரப்பியது. அந்தப் பெண்மணி திடீரென தன் படுக்கையிலிருந்து, பூரண சுகம் பெற்றவர்களாய் எழும்பி, இயேசுவை துதித்தார்கள். அன்னையர் தினத்தன்று தேவன் அவர்கள் பிள்ளைகளுக்கு ஓர் அன்னையை திரும்ப அளித்தார். ஆம், தேவனுடைய வார்த்தையினால் நாம் ஜீவனை பெற்று, ஜீவனுள்ள கற்களாக, இயேசு வாசம்பண்ணும் மாளிகையாகக் கட்டப்படுகிறோம்.

> தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானித்தால் ஜீவனுள்ள கற்களுள்ள மாளிகையாக கட்டப்படுவீர்கள்

### சமாதான மதிலினுள் மாளிகையாகக் கட்டப்படுதல்

ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும், தேவன் மனுஷீக பெலத்தைக் காட்டிலும் சிறந்த ஒன்றினால், தெய்வீக சமாதான கோட்டையால் நம் வாழ்வைச் சூழ்ந்துகொள்ளும் தருணம் ஒன்று உண்டு. வேதம், ''**அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி...**'' (சங்கீதம் 147:14) என்று கூறுகிறது.

சமாதானப் பிரபு என்று அழைக்கப்படுகிறவரே உங்கள் வீட்டை, குடும்பத்தை, வாழ்க்கையை தம் சமாதானத்தின் பரலோக சுவர் சூழ்ந்துகொள்ளும்படி செய்வார். இந்தத் தெய்வீக சமாதானம் இறங்கும்போது, சிறு தொந்தரவும் உங்கள் வாசஸ்தலத்திற்குள் நுழைய முடியாது. தேவனுடைய வார்த்தை, ''சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோமர் 16:20) என்று அறிவிக்கிறது. தேவன் தம் சமாதானத்தை உங்களைச் சுற்றி மதிலாகக் கட்டுவது கனத்திற்குரிய அடையாளமாகும். உங்கள் சமாதானத்தை அழிக்கும் எந்தச் செய்தியும் வராது. எந்தப் பொல்லாத நபரும் உங்கள் எல்லையை தாண்டி வரமாட்டார். உங்கள் வாழ்வாதாரத்தை அசைக்கும் எந்தச் சூழ்நிலையும் உருவாக அனுமதிக்கப்படாது. சமாதானப் பிரபு உங்களோடிருப்பதால் திடமனதாயிருங்கள். உங்கள் குடும்பத்தில் ஒருமனம் காணப்படும். உங்கள் பிள்ளைகள் பெரிய சமாதானத்தை அனுபவிப்பார்கள். உங்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கைத் துணையோடு சமாதானமாயிருப்பீர்கள்; தேவன், உங்கள் அக்கம்பக்கத்தினரோடு சமாதானத்துடன் வாழும்படி செய்வார். அந்தச் சமாதானம் பரிசுத்தத்தை உருவாக்கும்; பரிசுத்தத்தின் வழியாக நீங்கள் தேவனை காண்பீர்கள். இன்று ஆண்டவர் அந்த கிருபையை உங்கள் வாழ்வினுள் அனுப்புகிறார்; அந்தச் சமாதானம் உங்களுக்குள் நிலைத்திருக்கும்.

''**நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ?**'' (யோபு 1:10) என்று சாத்தான் தேவனுக்கு முன்பாக முறையிட்டதுபோல, ஆண்டவர் இப்போது உங்களைச் சுற்றி தம் வேலியைப் போடுகிறார். இந்தச் சமாதானத்தின் வேலியானது, உங்கள் ஆஸ்தியை, உங்கள் பொறுப்புகளை, உங்கள் முன்னேற்றத்தை, உங்களுக்கான எல்லாவற்றையும் சூழ்ந்துகொள்ளும். உங்கள் படிப்பு, உங்கள் குடும்ப வாழ்க்கை, வேலை, வியாபாரம், ஊழியம், வருமானம் எல்லாவற்றைச் சுற்றிலும் தேவன் வேலியடைத்து உங்கள் கைகளின் கிரியையை ஆசீர்வதிக்கிறார். யாராலும் அதைத் திருட முடியாது. எந்த வல்லமையும் அதை அசைக்க முடியாது. எந்த அதிகாரத்தாலும் அதை எறிந்துபோட முடியாது. தேவன், ''என் கண்மணிபோல உன்னை பாதுகாத்து வருகிறேன்'' என்று கூறுகிறார். ஆகவே, பயப்படாதிருங்கள். ''இயேசுவே சமாதான வேலியாக என்னைச் சூழ்ந்திருக்கிறார்'' என்று தைரியமாக கூறுங்கள்.

ஒரு முதலீடு ஏமாற்றியதும், சென்னை எண்ணூரைச் சேர்ந்த சகோதரி செல்வியின் குடும்பம் மிகுந்த பணக் கஷ்டத்தில், பயத்தில் சிக்கிக்கொண்டது. இரவில் தூக்கமே இல்லை. கடன் தொல்லையால் அவர்கள் கணவர் குடிக்க ஆரம்பித்தார்; வீட்டிலிருந்த சமாதானம் தொலைந்தது. தன்னுடைய சஞ்சலத்தின் மத்தியிலும் அவர்கள் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு வந்து தேவனை உண்மையாக தேடினார்கள். தேவன் அவர்களை சமாதானத்தால் நிறைத்தார்; தேவன், அவர்கள் சொத்தை விற்றதினால் நிரந்தர வருமானம் பெறும்படியும், கடன்களையெல்லாம் அடைக்கும்படியும் அவர்கள்

கணவர் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலை யடையும்படியும் கிருபை செய்தார். இன்று அவர்கள் பிள்ளைகள் திருமணமாகி மகிழ்ச்சியுடனும், சமாதானத் துடனும் வாழும்படி ஆசீர்வதித்துள்ளார்.

நாம் போராட்டங்களை சந்திக்கும்போதுதான், மற்றவர்கள்பேரில் மனதுருக்கம் பிறக்கிறது. நாங்கள் தேவ வார்த்தையை பிரசங்கிக்கப்பதற்கு முன்னதாக இது போன்ற சவால்களை தேவன் அனுமதிக்கிறார். ஆனால், நம்மைச் சுற்றி அக்கினியினாலும் சமாதானத்தினால் உருவாக்கப்பட்ட இயேசு என்ற வேலியை தேவன் அமைத்திருக்கிறார். ஆகவே, சாத்தானைக் குறித்தோ, நம்மை எதிர்க்கும் மக்களைக் குறித்தோ, உலகின் அழுத்தங்கள் குறித்தோ நாம் பயப்பட அவசியமில்லை. தேவ ஆவியானவர் எல்லார்பேரிலும் அன்பு நிறைந்த இருதயத்தை நமக்குத் தருகிறார். சமாதானத்தின் ஆவியானவர் உங்களுக்குள் ஆளுகை செய்வாராக. யாவரோடும் சமாதானமாக நீங்கள் வாழும்போது, தேவன் உங்களுக்கு பரிசுத்தத்தை அளிப்பார்; அந்தப் பரிசுத்தத் தின் வழியாக நீங்கள் ஆண்டவரை தரிசிக்கலாம் (எபிரெயர் 12:14).

**உச்சிதமான ஆசீர்வாதங்களுள்ள மாளிகையாகக் கட்டப்படுதல்**

**“உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்” (சங்கீதம் 81:16)**

என்ற வாக்குத்தத்தத்தின்படி தேவன் உங்களைக் கட்டுவார். இன்றிலிருந்து நீங்கள் ஆசீர்வாதங்களை மட்டுமல்ல; தேவன் அருளும், உயர்தரமான, நிரம்பி வழியும் உச்சிதமான ஆசீர்வாதங்களை சுமப்பீர்கள். ஓபேத் ஏதோமின் வீட்டுக்கு இப்படியே நடந்தது. வேதம், **“கர்த்தர் ஓபேத்ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்”** (2 சாமுவேல் 6:11) என்று கூறுகிறது. தாவீது ராஜா, “இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்;...உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பதாக” (2 சாமுவேல் 7:29) என்று ஜெபித்தான். ஆகவே, அது உங்களுக்குரியதாக இருக்கும். உங்கள் வீடு ஆசீர்வாதத்தினால் நிறைந்திருக்கும். இயேசு, ஐசுவரியமுள்ளவரானாலும், அவருடைய தரித்திரத்தி னாலே நாம் ஐசுவரியவான்களாகும்படி நமக்காக தரித்திர ரானார் (2 கொரிந்தியர் 8:9). இது, எதுவும் குறைவுபடா மல், உடைக்கப்படாத பூரணமான ஆசீர்வாதமாக விளங்கும்.

கிளாட்பாத்தர் என்ற சகோதரரின் சாட்சி: இரண்டு ஆண்டுகள் வேலையில்லாமல் இருந்த பின்னர், தேவன் என் வாழ்வை தலைகீழாக மாற்றியதை அனுபவித்து வியந்தேன். இந்த ஆண்டில் ஆண்டவர் எனக்கு வேலைக்கான இரண்டு வாய்ப்புகளைக் கொடுத்தார். முன்பு 18 ஆண்டுகள் நான் பெற்றதைக் காட்டிலும், ஏப்ரல் மாதத்தில் இருமடங்கு ஊதியத்தில் நிரந்தர வேலை கிடைத்தது. நான் 12 மாத ஒப்பந்த பொறுப்புக்கே விண்ணப்பித்தேன். ஆனால், நம்ப இயலாத அதிக ஊதியத்தில் எனக்கு நிரந்தர பணியிடம் கொடுக்கப்பட்டது. தசமபாகத்திற்கும் (10%) அதிகமாக கொடுக்கவேண்டும் என்ற என் அந்தரங்க ஜெபத்திற்கு தேவன் பதிலளித்த தோடு, வசதியாகவும் வாழும்படி செய்தார். தேவனுடைய எதிர்பாராத தயவை எண்ணி பிரமிப்படைந்தேன். மெய்யாகவே உண்மையுள்ளவரான தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்துகிறேன்.

ஆம், தேவன் நம்மை மாளிகையாக உருவாக்கும் போது மக்களுக்கும் அவரது ராஜ்ஜியத்திற்கும் ஆசீர்வாத மாக விளங்கும்படி நம்மை ஆசீர்வதிக்கிறார். இந்த ஆண்டில் நீங்கள் பல லட்சம்பேருக்கு ஆசீர்வாதத்தின் காரணமாக விளங்கும் படி கட்டப்பட்டு, ஆசீர்வ திக்கப்படுவீர்கள்.

> **இயேசுவின் சமாதானத்தோடும் ஆசீர்வாதத்தோடும், நீங்கள் ஜீவன் நிறைந்த மாளிகையாக மாறுவீர்கள்**

இன்றைக்கு தேவன் தம் பரிபூரணத்தை உங்கள் வாழ்வில் அனுப்புகிறார். இந்த பரி பூரணத்தினால் அவரது நோக்கங்களை நிறை வேற்றுவதற்கான முழு பெலனையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் செல்லுமிடமெங்கும் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுப்பீர்கள். உங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் மக்கள், “தேவன் அவர்களுடன் இருக்கிறார்” என்று கூறுவார்கள். கடினமான காலத்திலும் செழிப்பின் காலத்திலும் கிறிஸ்து வெளிப்படுவார். உங்கள் போராட்டங் களின் மத்தியில் தேவன் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை திரும்ப தருவார். நீதியான தேவனான அவர் உங்கள் அஸ்திபாரமாயிருப்பார். நீங்கள் கடினமான காலத்தைக் கடந்துசெல்லும்போது உங்களுடன் வந்து நீங்கள் அசைக்கப்படாமல் காப்பார். அவரது ஆவியினால் உங்களை தமது மாளிகையாக மறுரூபப்படுத்துவார். தமது வார்த்தையின் மூலம் உங்களை ஜீவனுள்ள கற்களாக வடிவமைக்கிறார். அவரது ஆசீர்வாதத்தினால் நீங்கள் பரிபூரண ஜீவனை அனுபவிப்பீர்கள். புயல்கள் வரலாம்; மழை பெய்யலாம்; பூமியதிர்ச்சிகள் நேரலாம்; ஆனால் தேவனுடைய மாளிகையாக நீங்கள் நிலைத்து நிற்பீர்கள். ஆண்டவர்தாமே இப்போதே இந்த ஆசீர்வா தத்தை உங்கள்மேல் முத்திரையிட்டு, 2026 புத்தாண்டு செழிப்பானதாக அமையச் செய்வாராக, ஆமென்.

குடும்பங்கள் ஜெபத்தால் நிலைநிறுத்தப்பட்டு, தேவ வாக்குத்தத்தங்களால் பெலப்படுத்தப்படுகின்றன. வேலையில் நிச்சயமின்மை, உயரும் செலவுகள், வியாதி, தாமதங்கள், உறவு முறிவு போன்ற புயல்கள் நம்மைச் சுற்றி வீசும்போது, தம்முடைய இயற்கைப்பாற்பட்ட பாதுகாப்பினுள் இருக்குமாறு தேவன் குடும்பங்களை அழைக்கிறார். வேதாகமத்தில், கோசேன் நாட்டில் தேவன் தம் மக்களை அமர்த்தினார். எகிப்தில் இருளும் அழிவும் பயமும் நிலவியபோது, கோசேன் நாடு சமாதானம், பாதுகாப்பு இவற்றோடு வேண்டியவற்றையும் பெற்று அனுபவித்தது.

**இதே தெய்வீக பாதுகாப்பு உங்கள் வீட்டின் மேல் இன்று தங்கும்**



**உங்கள் குடும்பத்துக்கு தெய்வீக இடைபடுதல் தேவையாயிருக்கிறதா?**

ஒருவேளை நீங்கள் குணப்படுவதற்காக, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக, வீட்டில் சமாதானத்திற்காக, பொருளாதாரத்தில் பெருமாற்றத்திற்காக ஜெபித்துக்கொண்டிருக்கலாம். ஆண்டவர் உங்கள் கண்ணீரை காண்கிறார்; உங்கள் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். குடும்ப ஆசீர்வாத திட்டத்தின் மூலம், இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்களின் ஜெப பாதுகாப்பை உங்கள் வீட்டாருக்கு வழங்கலாம்.

# குடும்ப ஆசீர்வாத திட்டம்

## மிகுந்த ஆசீர்வாதம்



எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இளையவள் மரணப்படுக்கையில் இருந்தாள். பக்கத்து வீட்டுக்காரர் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்குச் செல்லுமாறு எனக்கு ஆலோசனை கூறினார். ஜெப வீரர் எங்களுக்காக ஜெபித்தார். என் மகள் அன்றே வியாதி முழுமையாக குணமாகி எழுந்தாள். என்னால் நம்பவே முடியவில்லை. நான் உடனடியாக எங்கள் குடும்பத்தை குடும்ப ஆசீர்வாத திட்டத்திலும், என் மகள்கள் இருவரையும் இளம் பங்காளர்களாகவும் இணைத்தேன். அதிலிருந்து என் மகள்கள் இருவரையும் ஒவ்வொரு அடியிலும் தேவன் வழிநடத்தினார். அவர்கள், விருப்பமான கல்லூரிகளில் விருப்பமான படிப்புகளை முடித்தனர். ஓராண்டு இடைவெளியில் அவர்கள் திருமணம் கடனே இல்லாமல் நடந்தது. என் மூத்த மகளுக்கு இப்போது பெண் குழந்தை பிறந்துள்ளது. கொடிய கார் விபத்திலிருந்து தேவன் எங்களைப் பாதுகாத்தார். என் மகள்கள் இருவரும் பக்திக்குரிய கணவர்மாரை ஆசீர்வாதமாக பெற்றுள்ளனர். எங்கள் குடும்பம் தேவ தயவில் நடக்கிறது. இயேசுவுக்கே சகல மகிமையும் உண்டாவதாக. - நிர்மலா தேவி, சென்னை

**சகோதரி நிர்மலா தேவியைப்போல உங்கள் குடும்பத்தையும் ஜெபம் பாதுகாக்கும்; ஆசீர்வாதங்கள் தொடரும்.**

**குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் நீங்கள் இணையும்போது:**

**தினசரி ஜெபம்:** உங்கள் குடும்பத்திற்காக அனுதினமும் ஜெபம் ஏறெடுக்கப்படும்

**திருமண நாள் ஆசீர்வாதம்:** உங்கள் திருமண நாளின்போது தொலைபேசி மூலம் விசேஷித்த அழைப்பு

**வாக்குத்தத்த சான்றிதழ்:** உங்கள் நன்கொடை ரூ.5,000 அடையும்போது தேவ வசனம் அடங்கிய சான்றிதழை பெறுவீர்கள்.

இது பங்களிப்பு மட்டுமல்ல; பாதுகாப்பு, சமாதானம், அருட்கொடைக்கான உடன்படிக்கையாகும்

"என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்" (ஏசாயா 32:18)

இன்றே இணைந்திடுங்கள்; கோசேனின் ஆசீர்வாதத்திற்குள் அடியெடுத்து வைத்திடுங்கள்

மாதந்தோறும் | ரூ.300/- | ரூ.500/- | ரூ.1,000/- | ரூ.5,000/-

மேலும் விவரங்களை அறியவும், பதிவு செய்யவும்

www.jesuscalls.org/donate/fbp என்ற இணைய பக்கத்தை பாருங்கள்

நன்கொடை அளித்திடுங்கள்

# கட்டப்படுங்கள்; பாக்கியம் பெறுங்கள்



குடும்ப பகுதி

அன்பானவர்களே,
இந்தப் புத்தாண்டில் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.
2026 புத்தாண்டில் குடும்பமாக கட்டப்பட்டு செழித்திடுங்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறேன். **"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா"** (சங்கீதம் 127:1) என்ற தேவ வார்த்தையை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இம்மாதத்தில் ஆண்டவர் உங்கள் வீட்டைக் கட்டப்போகிறார்; நீங்கள் உங்கள் வீட்டைக் கட்டுவதற்கு அவரை அனுமதிக்கப்போகிறீர்கள். நாம் எப்படி அனுமதிப்பது? நம் இருதயங்களின், வீடுகளின் கதவுகளை இயேசுவுக்கு திறந்து, ஆண்டவர் முழு இருதயத்தோடும் தேடும்போது அனுமதிக்க முடியும். "என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோஸ் 5:4) என்று கர்த்தர் இஸ்ரவேல் வீட்டாருக்குக் கூறுகிறார். இஸ்ரவேல் மக்களிடம், "என்னைத் தேடுங்கள்" என்று மாத்திரமே கர்த்தர் சொன்னார். அதன் பிறகு, "நான் உங்களை பிழைக்கப்பண்ணுவேன்" என்று கூறினார்.

ஒருமுறை ஒரு குடும்பத்தார் எங்கள் வீட்டுக்கு வந்தனர். அவர்கள், என் அப்பா சகோதரர் தினகரனிடமிருந்து ஆசீர்வாதம் பெற விரும்பினர். ஆனால் என் அப்பாவும் அம்மாவும் கூட்டத்திற்குச் சென்றிருந்தபடியால் அவரை சந்திப்பதற்கு ஒதுக்கிய நேரத்திற்கு அவர்களால் வர முடியாமற்போனது. ஆகவே, அந்தக் குடும்பத்தினர் என் அப்பாவிடமிருந்து ஆசீர்வாதம் பெறுவதற்காக ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. என் அப்பாவும், அம்மாவும், கணவரும் வீட்டுக்குள் நுழைந்ததும், "சகோதரரே, மன்னித்துக்கொள்ளுங்கள்; ஒரு மணி நேரம் உங்களைக் காத்திருக்க வைத்துவிட்டோம்; மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கு அந்த சகோதரர், "சகோதரரே, தயவுசெய்து மன்னிப்பு கேட்காதிருங்கள். உங்கள் வீட்டிலிருந்த ஒரு மணி நேரமும் மிகுந்த சமாதானத்தை அனுபவித்தேன். உங்கள் வீட்டுக்குள் காலடி வைத்ததுமே ஏதோ ஒன்று என் இருதயத்தை நிறைத்தது. என்னுடைய பயம் எல்லா மறைந்துபோனது. இப்போது ஆண்டவர் என் பிரச்னைகளையெல்லாம் அகற்றிவிட்டார் என்று உணர்கிறேன். என் உள்ளத்தில் மிகுந்த சமாதானம் இருக்கிறது" என்றார்.



அன்பானவர்களே, உங்கள் வீட்டையும் அப்படி மாற்றுவதற்கு ஆண்டவர் விரும்புகிறார். உங்கள் வீட்டுக்குள் வருகிற அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். வேதாகமத்தில் சகேயுவைப் பற்றி அறிகிறோம் (லூக்கா 19:1-9). அவன் குள்ளமான மனுஷனாக இருந்தபடியால், கூட்டத்தின் நடுவில் இயேசுவைப் பார்க்க இயலவில்லை.

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

ஆகவே, அவன் வேகமாக ஓடி, ஒரு காட்டத்திமரத்தின்மீது ஏறினான். இயேசு அண்ணாந்து அவனைப் பார்த்து, ''நான் வந்து உன் வீட்டில் தங்குவதற்கு விரும்புகிறேன்'' என்றார். இயேசு அவன் வீட்டுக்குச் சென்றார். அவன் வீட்டினர் அனைவரையும் அவர் ஆசீர்வதித்திருக்க வேண்டும். தேவன், நம் வீடுகளிலும் வாசம்பண்ண விரும்புகிறார். தினமும் நாம் குடும்பமாக கூடி, தேவனிடம் காலையும் இரவும் ஜெபிக்கும்போது, அவர் நமக்கு வெளிப்பாடுகளை தருவார்; அன்றைக்கு என்ன நடக்கும் என்பதைக் குறித்து நம்மோடு பேசுவார். உங்கள் குடும்பத்திலும் தேவனுடைய வார்த்தையை உயர்த்துவீர்களா? தேவனுடைய வார்த்தையைக் குறித்து உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறீர்களா?

எங்கள் வீட்டில் பிள்ளைகளை ஜெபிக்கும்படியோ, வேதத்தை வாசிக்கும்படியோ ஒருபோதும் கட்டாயப்படுத்த மாட்டோம். நாங்கள் நாள்தோறும் ஜெபிக்கிறதை, பரிசுத்த ஆவியின் சந்தோஷம் எங்களை நிரப்புகிறதை பார்த்து, அமைதியாக அதைப் பின்பற்ற ஆரம்பிக்கிறார்கள். தாங்களாகவே ஜெபிக்க ஆரம்பித்த உடனே, ''ஆண்டவரே, என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பும்'' என்று கேட்கிறார்கள். என் மகனுக்கு பத்து வயதானபோது, அவன் வெகுளியாக, ''அம்மா, நீங்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறீர்கள். இயேசு திடீரென வந்தால், எங்கள் எல்லோரையும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வாரா? அல்லது ஷேரனையும், ஸ்வீட்டியையும் என்னையும் விட்டுவிடுவாரோ?'' என்று கேட்டான். அவனது வாஞ்சை என் உள்ளத்தைத் தொட்டது. அவனுக்கு 12 வயதானபோது, மூன்று பிள்ளைகளுமே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதில் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, நான் சாம், ஷேரன், குட்டி ஸ்வீட்டி மூவரையும் ஒரு சிறிய அறைக்குள் அழைத்துச்சென்று, அவர்களை நிரப்புமாறு ஆண்டவரிடம் ஜெபித்தேன். அவர்களும் ஊக்கமாக கேட்டார்கள். சில வாரங்களுக்குள்ளாக சாமும், ஷேரனும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர். அப்போது மூன்று அல்லது நான்கு வயதான ஸ்வீட்டியும் தன் அண்ணனையும் அக்காவையும் பார்த்து அந்நிய பாஷையில் ஜெபிப்பதைப்போல செய்வாள். சிறுவர்களுக்கான கூட்டத்தில் அவளும் ஊக்கமாக ஜெபித்தாள். ஆண்டவர் அவளையும் பரிசுத்த ஆவியால் நிறைத்தார். இன்று தேவன் எங்கள் பிள்ளைகள்மேல் பரிபூரண அபிஷேகத்தை ஊற்றியிருப்பதால் குடும்பமாகக் களிகூருகிறோம்.




அன்பானவர்களே, தேவனை நம் உள்ளங்களிலும் வீடுகளிலும் ஏற்றுக்கொள்வதால் இந்த சந்தோஷத்தை குடும்பத்தில் அனுபவிக்கலாம். தேவன் நம் உள்ளங்களுக்குள் வரும்போது, அவர் எல்லாவற்றையும் பரிபூரணமாக தருகிறார். ஆகவே, நாம் நம் படிப்பை, வேலையை, ஊழியத்தை மகிழ்ச்சியோடு செய்யலாம்; குடும்ப வாழ்க்கையிலும் சந்தோஷம் கிடைக்கும். இந்த மாதத்தில் இது உங்கள் வீட்டில் நடக்கப்போகிறது. இன்றிலிருந்து நீங்கள் மாற்றத்தைப் பார்ப்பீர்கள். இன்று குடும்பமாக தேவனை நோக்கிப் பார்த்து உங்கள் உள்ளங்களுக்குள் அவரை அழைத்திடுங்கள். உட்காரும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், படுத்திருக்கும்போதும் அல்லது எழுந்திருக்கும்போதும் தேவனுடைய வார்த்தையை தியானித்திடுங்கள். அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்ளுங்கள்; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுங்கள் என்று வேதம் கூறுகிறது (உபாகமம் 6:6-9). தேவனுடைய வார்த்தையை கருத்தாய் கைக்கொள்ளுவோம். கர்த்தரும், ''இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்'' (யோசுவா 1:8) என்று கட்டளையிட்டுள்ளார்.

உங்கள் வழிகள் வாய்க்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா? உங்கள் வாழ்க்கையில் வெற்றியடைய விரும்புகிறீர்களா? அப்போது இன்றிலிருந்து உண்மையாக, தொடர்ந்து, முழுமனதுடன் தேவனை உண்மையாய் பின்பற்றுவோம். இதை மாத்திரமே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் பயங்கரமான காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம்மை நசுக்குவதற்கு, நம் குடும்ப வாழ்க்கையை அழிப்பதற்கு, பிரிவினையை உண்டாக்குவதற்கு பிசாசின் வல்லமை காத்திருக்கிறது. ஆகவே, உங்கள் வீட்டில் பிசாசுக்கு எவ்விதத்திலும் இடங்கொடாதிருங்கள். உங்கள் வாழ்க்கையில் நுழைவதற்கு அவனை அனுமதிக்காதிருங்கள். எங்கும் அவனுக்கு இடங்கொடாதிருங்கள். தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்; நிச்சயமாகவே தேவன் உங்கள் குடும்பத்தைக் கட்டுவார்; பாக்கியமளிப்பார். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



வாலிபர் பகுதி

# பலத்த தேசமாக உருவாக்கப்படுங்கள்

அன்பு நண்பரே,

2026 புத்தாண்டு ஆசீர்வாதமாய் அமைய வாழ்த்துகிறேன். ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின்படி மிகுந்த சந்தோஷம் உண்டாகவேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த ஆண்டுக்கான தேவனுடைய வாக்குத்தத்தம், ''**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்**'' (ஏசாயா 60:22) என்பதாகும். இந்த ஆண்டில் தேவன் உங்களுக்கென்று மகத்துவத்தை வைத்து வைத்திருக்கிறார். அவர்தாமே உங்களை உருவாக்குவதால் நீங்கள் மகத்துவத்திற்குள் நுழைவீர்கள்.

தேவன், முதலாவது ஆபிரகாமை அழைத்தபோது, அவன் பராக்கிரமசாலியாகவோ, சிறந்த தலைவனாகவோ, பூமியில் செல்வாக்கு உள்ளவனாகவோ இல்லை. தேவனை தேடாத மக்கள் வாழ்ந்த பண்பாட்டு கொண்ட 'ஊர்' என்ற பட்டணத்தில் ஓர் எளிய மனிதனாக வாழ்ந்தான். அவனுக்குக் குழந்தையில்லை; கண்ணுக்கெட்டிய எதிர்காலமுமில்லை. ஆனாலும், தேவன் சாதாரணமானவனாக காணப்பட்ட அவனிடம், ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்...பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' (ஆதியாகமம் 12:2,3) என்று கூறினார்.

ஆபிரகாமுக்கு மகன் இல்லை; தேசம் இல்லை; திட்டம் எதுவுமில்லை. ஆனால், சிறியவனை அழைத்து அவனுடன் ஐக்கியப்பட்டு அவனை பெரியவனாக்குகிற தேவனை விசுவாசிப்பதற்கான இருதயம் இருந்தது. எல்லாவற்றையும்விட அதுவே அதிக வல்லமை கொண்டதாயிருந்தது.



## தேவன் மகத்துவத்தை எப்படி உண்டாக்குகிறார்?

எளிய மனிதனாக இருந்து பலத்த தேசமாக உருவான ஆபிரகாமின் எழுச்சி, நமக்கு தேவனுடைய பார்வையில் பெரியவனாவதற்கு அத்தியாவசியமான மூன்று சத்தியங்களை கற்பிக்கிறது.

### நீடிய பொறுமையினால் வரும் மகத்துவம்

தேவன், ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். ஆனால், அது உடனே நிறைவேறவில்லை. ஈசாக்கு பிறப்பதற்கு முன்னர் ஆபிரகாம் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந்தான். அந்தக் காலத்தில் அவன் சந்தேகத்தை, ஏமாற்றங்களை, தேவனிடமிருந்து நீண்ட மௌனத்தை எதிர்கொண்டான். ஆனாலும், ''அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்'' என்று வேதம் கூறுகிறது (ரோமர் 4:20). மாறாக, அவனது விசுவாசம் பெலப்பட்டது; தேவனுடைய நேரத்தின்மேல் நம்பிக்கை வைக்க அவன் கற்றுக்கொண்டான்.

அவ்வாறே காத்திருக்கும் காலத்தின் வழியாக தேவன் நம்மை கட்டி எழுப்புகிறார். எல்லா தாமதமும் நம் பொறுமையை வடிவமைக்கிறது. பதில் பெறாத எல்லா ஜெபமும் நம் நம்பிக்கையை பெலப்படுத்துகிறது. எல்லா மௌனமாக தருணமும் நம்மை முதிர்ச்சியடையப் பண்ணுகிறது. தேவனின் கையால்

samuel@jesuscalls.org samueldhinakaranofficial

> தேவன், தம் மகிமைக்காக எங்கே உங்களை வைக்கிறாரோ, அதே இடத்தில் உண்மையாக, பொறுமையாக, கீழ்ப்படிதலுடன் இருப்பதற்கு உங்களை அர்ப்பணியுங்கள்

'பலத்த ஜாதி'யாவதற்கு, எதுவும் மாறாததுபோல் தோன்றும்போதுகூட, நம்பிக்கையும் நீடிய பொறுமையும் தேவைப்படுகிறது.

### சோதனைகளை மேற்கொள்வதன் மூலம் வரும் மகத்துவம்

தேவன் நல்லது என்று கூறுவதற்குப் பதிலாக பார்வைக்கு நல்லதாகக் காணப்படும் நுட்பமான சோதனையை மேற்கொள்வது எப்படி என்று ஆபிரகாமின் வாழ்க்கை கற்றுக்கொடுக்கிறது. ஆபிரகாமின் மேய்ப்பருக்கும் லோத்தின் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டானபோது, ஆபிரகாம், லோத்துவை முதலில் தெரிந்தெடுக்க அனுமதித்தான். வேதம், "**அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான்...அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்துதேசத்தைப்போலவும் இருந்தது**" (ஆதி. 13:10) என்று கூறுகிறது.

லோத்து, தான் பார்த்ததைக் கொண்டு முடிவெடுத்தான். நிலத்தின் அழகும் செழிப்பும் தீர்மானிக்கும்படி தன்னை நடத்த அவன் அனுமதித்தான். தேவனை நோக்காமல் பல வளங்களையும் கொண்டிருந்தும், நீதியற்றவையாயிருந்த சோதோம், கொமோரா பட்டணங்களுக்கு அவன் சென்றான். ஆசீர்வாதம்போல காணப்பட்டது விரைவில் கண்ணியாகி, அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் பெரிய ஆபத்தைக் கொண்டு வந்தது.

ஆனால், ஆபிரகாம் கண்ணின் பார்வையைக் கொண்டு தெரிந்தெடுக்கவில்லை. அவன் தேவனுடைய சத்தத்திற்காக காத்திருந்தான். சமவெளிகள் விளைச்சலுக்கு உகந்தவையாகக் காணப்பட்டாலும் ஆபிரகாம், தேவனுடைய வழிநடத்துதலின்படி தோற்றமே உண்மையான மகத்துவத்திற்குக் காரணமாகாது என்று அறிந்திருந்தான். தேவன் தன்னை வைக்கும் இடத்தில் செழிக்கப்பண்ணுவார் என்று நம்பி அதிக கவர்ச்சியில்லாத மலை தேசத்தில் அவன் தங்கினான். லோத்து கிளம்பியதும் தேவன் வல்லமையான வாக்குத்தத்தை ஆபிரகாமுக்குக் கொடுத்தார். "**...உன் கண்களை ஏறெடுத்து...பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து...பெருகப்பண்ணுவேன்**" (ஆதி. 13:14-16). வெளிப்பார்வையின் அடிப்படையில் அவசரமாக முடிவெடுக்க ஆபிரகாம் மறுத்தான்.

கண்கள் வஞ்சிக்கும்; வெளியே அலங்காரமாயும், உள்ளே அழுக்காகவும் இருக்கும்; குறுக்கு வழியாக காணப்படுவது ஆவிக்குரிய ஆபத்தைக் கொண்டு வரும்; பார்வைக்கு நன்றாக தெரிவதெல்லாம் தேவனுடைய தெரிவாக இருக்காது என்பதை அவனுடைய உதாரணம் காட்டுகிறது.

சோதனை பெரும்பாலும் அழகான தோற்றத்தையும், எளிதான வாய்ப்பையும், பார்வைக்கு இன்பமானதாகவும், கவர்ச்சியான பாதையையும் கொண்டிருக்கும். தோற்றத்தைக் காட்டிலும் கீழ்ப்படிதலையும், பார்வையைக் காட்டிலும் விசுவாசத்தையும், மனுஷீக தர்க்கத்தைக் காட்டிலும் தேவனுடைய வழிநடத்துதலையும் கொண்டு ஆபிரகாம், சோதனையை ஜெயித்தான். தேவனுடைய வழியை அவன் தெரிந்துகொண்டதால், ஆபிரகாம் சென்ற இடத்தையெல்லாம் தேவன் ஆசீர்வதித்தார். பார்வையைக் கொண்டு லோத்து தெரிந்தெடுத்த தேசம் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் அழிக்கப்பட்டது.

உங்கள் வாழ்க்கையிலும் நன்மையானதாக தோன்றும் ஒரு வாய்ப்பு, ஓர் உறவு, பதவி அல்லது பொருள் தேவனுடைய ஆசீர்வாதம் கொண்டதாக இல்லாமல் போகலாம். உங்கள் கண்கள் பார்ப்பதை பின்பற்றுவதற்குப் பதிலாக தேவனுடைய சத்தத்திற்குக் காத்திருந்தால் அவரே உங்களை உயர்த்துவார்; ஆசீர்வதிப்பார்; சிறந்ததென்று நீங்கள் எண்ணியதற்கு மேலானவற்றை அளிப்பார்.

### சாட்சியாவதன் மூலம் வரும் மகத்துவம்

ஆபிரகாமின் வாழ்க்கை அவனுடைய ஆஸ்தியினாலோ, நிலத்தினாலோ அல்ல; அவனது சாட்சியினால்தான் சிறப்புற்றது. அவன் தேவனுடன் நடக்கிற மனுஷனாக, தேவனுக்குக் கீழ்ப்படிந்தவனாக, தேவனை விசுவாசித்தவனாக, ஈசாக்கை பலியிடும்படி தேவன் கேட்டபோது முழுவதும் அர்ப்பணித்தவனாக அறியப்பட்டான். அவன் வாழ்க்கை, "உண்மையுள்ளவரான தேவனில் விசுவாசம் வைத்திடுங்கள்" என்ற செய்தியை உலகிற்கு உரக்க அறிவித்தது.

**"தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்" (எபிரெயர் 11:19)**

அவனது சாட்சியினால்தான் தேசங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. ராஜாக்கள் அவனை கனம்பண்ணினார்கள். சந்ததியினரிடம் அவன் செல்வாக்கு உடையவனாக விளங்கினான். இப்போது கோடிக்கணக்கானோர் அவனை விசுவாசத்தின் தந்தையாக பார்க்கின்றனர். இதுவே, தேவன் இன்று உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தமாயிருக்கிறது. தேவன், தம் மகிமைக்காக எங்கே உங்களை வைக்கிறாரோ அந்த இடத்தில் உண்மையாக, பொறுமையாக, கீழ்ப்படிதலுடன் இருப்பதற்கு அர்ப்பணிப்புடன் விளங்குங்கள். ஆபிரகாமை மறுரூபமாக்கிய தேவன் தாமே உங்களையும் பலத்த, உறுதியான தேசமாக உருவாக்குவாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# இயேசு அழைக்கிறார் ராஞ்சி ஜெப கோபுரம் முழுமையாக புதுப்பிக்கப்படவேண்டும்

## நீங்கள் உதவுவீர்களா?




**கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார்**

ஆறுதல், சுகம், வழிகாட்டல் தேடி வருகிற அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் பலத்த அற்புதங்கள் நடப்பதற்கு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் உதவுகின்றன.

**தோல்வி மாறியது; தயவு கிடைத்தது**

மகேஸ்வரி குமாரி என்ற சகோதரி, ஒரு வேலை கிடைப்பதற்கு ஒன்பது வருடங்களாக திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எல்லா முயற்சிகளும் ஏமாற்றமாக முடிந்ததால், அவர்கள் மனச்சோர்வுக்கும் மனரீதியான அழுத்தத்திற்கும் உள்ளானார்கள். ஆனாலும் விட்டுவிடாமல் ஜெபத்திற்கும் ஆலோசனைக்கும் ராஞ்சி ஜெப கோபுரத்தை தொடர்பு கொண்டார்கள். ஜெப வீரர், அவர்கள் எதிர்காலத்திற்காகவும், மனதின் அமைதிக்காகவும், தேவனுடைய ஆசீர்வாதம் அவர்கள் வாழ்வில் கிடைக்கவும் ஊக்கமாக ஜெபித்தார். தேவன் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுத்தார். மகேஸ்வரி, ஜார்க்கண்ட் உதவி ஆசிரியர் தேர்வில் வெற்றி பெற்றார். ராஞ்சியிலேயே பணி நியமனமும் செய்யப்பட்டார். சொந்த ஊரிலேயே வசதியாக பணி செய்யும்படி கிடைத்தது. "ஆண்டவர் தோல்வி கிடைத்த ஆண்டுகளை மாற்றி என்னை கனப்படுத்தினார்," என்று அவர்கள் சாட்சி கூறுகிறார்கள்.

ராஞ்சி ஜெப கோபுரம், மூன்று ஆண்டுகள் முழு ஜார்க்கண்ட் மாநிலத்துக்கும் நம்பிக்கை அளிப்பதாக விளங்கி வருகிறது. கடந்த ஆண்டு இந்த ஜெப கோபுர ஊழியத்தின் மூலம் 37,500 பேரை சந்தித்தோம். வரும் 2026 ஆண்டில் 50,000 ஆத்துமாக்களை சந்திப்பதற்கு எதிர்பார்க்கிறோம்.

இத்தனை ஆத்துமாக்களை சந்திப்பதற்கு ராஞ்சி ஜெப கோபுரத்தின் வசதிகளை மேம்படுத்தப்படவேண்டும். LED விளக்குகளோடு அரங்கத்தை புதுப்பிக்கவேண்டும், குளிர்சாதன வசதி (AC), மேடை, ஓய்வறைகள், AV அறைகள், பொதுக்கூட்டங்களை நடத்தும்போது பயன்படுத்தக்கூடிய அறைகள், வாலிபர் ஆராதனை, சிறுவர் ஊழியம், பயிற்சி, தொலைபேசி ஜெப கோபுரத்திற்கு கூடுதல் இருக்கைகள், அதிகமான ஆலோசனை அறைகள், அமைதியான தியான அறை இவையும் அமைக்கப்படவேண்டும்.

## புதுப்பிக்கும் பணிகளைச் செய்வதற்கு 3 கோடி ரூபாய் தேவை

நீங்கள் ❑ ரூ. 5,00,000 ❑ ரூ.3,00,000 ❑ ரூ.1,00,000 ❑ ரூ. 50,000 ❑ ரூ.25,000 ❑ ரூ. 10,000 ❑ ரூ.5,000 ❑ அல்லது ஆண்டவர் உங்களை வழிநடத்தும் எந்தத் தொகையும் வழங்கலாம்.

வாருங்கள். நாம் ஆண்டவர் அமர்ந்து ராஞ்சி மக்களை ஆசீர்வதிப்பதற்கு அழகிய ஜெப கோபுரத்தைக் கட்டுவோம். கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார் (2 சாமுவேல் 7:11)

மேலும் விவரங்களுக்கு: boranchi@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 63807 52243 (காலை 8 முதல் 8 மணி வரை) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ராஞ்சி ஜெப கோபுர கட்டுமான நிதிக்கு நன்கொடை அளித்திடுங்கள்

நல்ல நிர்வாக அனுபவமும், ஊழியக் குழுவை வழிநடத்த வாஞ்சையும் ஆவிக்குரிய வரமும் கொண்ட முதுநிலை மேலாளர் தேவை.
உங்களைப் பற்றிய விவரங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: careers@jesuscalls.org

# நெருங்கிய வட்டத்தின் அழுத்தத்தை கையாளுவது எப்படி?

– கிரேஸி ஜாண்



எதுவும் உடனடியாக கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் உலகில் நிறைந்திருக்கிறது. கவனத்தைச் சிதறச்செய்கிற காரியங்கள் ஏராளம். இதனால் சுயகட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கான அழைப்பு அதிக முக்கியமானதும், சவாலானதாகவும் உள்ளது. நாம் கண் திறப்பதிலிருந்து மூடும் வரைக்கும் இச்சை, பொழுதுபோக்கு, சமுதாய அழுத்தம், சந்தோஷம் அளிப்பதாகக் கூறி ஆத்தும இளைப்பாறுதலை அகற்றிவிடும் சிற்றின்பம் போன்ற பல வடிவங்களில் சோதனைகள் நம்மை சூழ்ந்துள்ளன.

நம்மில் அநேகர் அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவற்றை கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாத குணங்களாக கூறி வருகிறோம். ஆனால், நாம் எத்தனை முறை இச்சையடக்கத்தைக் குறித்து பேசுகிறோம் வேதாகமம், ஆவியின் கனியினுள் ஒன்றாக அதைக் கூறினாலும், மிகவும் குறைவான முக்கியத்துவம் கொண்டதாகவே உள்ளது (கலாத்தியர் 5:22,23). இச்சையடக்கம் என்பது தவறானவற்றுக்கு 'முடியாது' என்று சொல்வது மாத்திரமல்ல; நம் வாழ்வுக்கு சிறந்தவற்றுக்கு 'ஆமாம்' என்று சொல்வதுமாகும்.

## எது இச்சையடக்கம்?

இச்சையடக்கம் என்பது சோதனை வரும்போது உணர்ச்சிகளை, விருப்பங்களை, விளைவுகளை யோசிக்காத தூண்டுதல்களை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலாகும். ஆசையைவிட கீழ்ப்படிதலையும், சிற்றின்பத்தைவிட ஞானத்தையும், சமரசத்தைவிட பரிசுத்தத்தையும் தெரிவு செய்யக்கூடிய ஆவிக்குரிய ஒழுக்கமாகும்.

ஓர் எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். உங்கள் அம்மா கொடுத்திருக்கும் பொருட்களின் பட்டியலோடு நீங்கள் ஒரு பல்பொருள் அங்காடிக்குள் செல்வதாக நினைத்துக்கொள்ளுங்கள். அம்மா கேட்டவற்றை மட்டும் எடுக்க நீங்கள் நினைத்தாலும், பக்கத்து அலமாரியில் சிப்ஸ், மிட்டாய், சாக்லேட்டுகள் நிறைந்திருக்கும். நீங்கள் உணருவதற்கு முன்னரே, வாங்கவேண்டுமென்று திட்டமிடாத பொருட்களால் உங்கள் கூடை நிறைந்துவிடும்.

சோதனை இப்படித்தான் செயல்படுகிறது. உடனடி விருப்பத்தைக் கொடுத்து, உண்மையான காரியங்களை விட்டு நம் கவனத்தைத் திருப்பி விடுகிறது.

## முடியாது என்று சொல்வதற்கான ஆற்றல்

இச்சையடக்கம் அல்லது தன்னைக் கட்டுப்படுத்துதல் ஒரு நன்னெறி நடத்தை மட்டுமல்ல; அது தெய்வீக ஆற்றலாகும். சோதனை வரும்போது 'முடியாது' என்று சொல்வது, மற்றவர்கள் அனைவரும் 'சரி' என்று ஒத்துக்கொள்ளும்போது கடினமாக இருக்கும். ஆனால், நாம் எதிர்க்கும் ஒவ்வொரு முறையும் பெலப்படுகிறோம். தீங்கான ஒன்றுக்காக நம்மையே மறுக்கும் ஒவ்வொரு தருணத்திலும் நம்மை மேம்படுத்த இடம் கொடுக்கிறோம்.

ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் 1972ம் ஆண்டு ஆராய்ச்சியாளர்கள் செய்த ஓர் ஆய்வு பின்னர் மார்ஷ்மெல்லோ சோதனை (Marshmallow Test) என்று பெயர் பெற்றது. ஒரு கூட்டமான சிறுபிள்ளைகள் முன் மார்ஷ்மெல்லோ மிட்டாயை வைத்தனர். அவர்களிடம் உடனடியாக என்றால் ஒரு மிட்டாயை சாப்பிடலாம்; கொஞ்சம் பொறுத்திருந்தால் இரண்டு மிட்டாய்கள் கிடைக்கும் என்று கூறினார்கள். சில குழந்தைகள் தன்னையே கட்டுப்படுத்தி இருந்தார்கள்; வேறு சிலர் தங்களையே கட்டுப்படுத்த முடியாமல் விட்டுக் கொடுத்தனர். அப்படி காத்திருந்தவர்கள் பல ஆண்டுகள் கடந்த பிறகு பள்ளியில், உறவுகளில், தொழில் வாழ்க்கையில் மிகவும் வெற்றிகரமாக விளங்குவதை



ஸ்டெல்லா ரமோலா பதிலளிக்கிறார்

அந்த ஆய்வு காட்டியது. உடனடி இன்பத்தை தாமதப் படுத்தும் எளிய தகுதி அவர்கள் வாழ்க்கை முழுவதையும் உருவாக்கியது.

பூமிக்குரிய வெற்றியை தராவிட்டாலும் நம் நித்திய முடிவை தீர்மானிக்கக்கூடிய இச்சையடக்கம் என்னும் ஆவியின் கனி எவ்வளவு அதிக வல்லமையுள்ளதாயிருக் கும்! தேவனுக்குக் காத்திருக்க நாம் கற்றுக்கொள்ளும் போது, இவ்வுலகின் சிற்றின்பங்களை எதிர்க்கவும், நமக் காக அவர் ஆயத்தம்பண்ணியிருக்கிற மிகப்பெரிய பலனை பெற்றுக்கொள்வதற்கான நிலையில் இருத்திக் கொள்ளவும் செய்கிறோம்.

### மெய்யான இச்சையடக்கத்தின் ஆதாரம்

வேதம், "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7) என்று நமக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த வசனம், மெய்யான இச்சையடக்கம், மன உறுதியினால் அல்ல; பரிசுத்த ஆவியினால் வருகிறது என்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறது.

நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கும்போது, நம்மை இரகசியமாய் அழைக்கும் சோதனைக்கு இடம் கொடுக்காமல் இருக்கும்படி அவர் நம்மை பெலப்படுத்து கிறார். தவற்றையும் சரியானவற்றையும் பிரித்தறியும் ஞானத்தை அவர் நமக்குத் தருகிறார்; பிரபல தன்மை யையோ, இன்பத்தையோ விலையாக கோரினாலும் சரியானதையே தெரிந்துகொள்ளும் தைரியத்தையும் கொடுக்கிறார்.

நம்முடைய சிற்றின்ப நாட்டத்திற்கு பதிலாக ஆவியா னவருக்கு விட்டுக்கொடுக்கும் ஒவ்வொரு தருணமும் கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவின் சாயலுக்கு மறு ரூபமாக்கப்படுகிறோம். காலப்போக்கில் சுயத்தைக் கட்டுப்படுத்தல் அல்லது இச்சையடக்கம் நம் வாழ்க்கை முறையாகும்; பாவத்தின் கட்டிலிருந்து நம்மை விடுவிக்கும் சந்தோஷமான ஒழுங்காகும்.

### உரிய பலனைப் பெற்று வாழ்தல்

இச்சையடக்கம், நம்மை கவரக்கூடியதாக இல்லாம லிருக்கலாம். அது சமாதானத்துக்கு, தெளிவுக்கு, ஆசீர்வா தத்திற்கு வழிநடத்தும். ஆவியினால் வாழ்கிறவர்கள், அக்கிரமத்திலிருந்தும் வருத்தத்திலிருந்தும் விடுபட்டு சுதந்திரமாக நடப்பார்கள். ஞானமான தீர்மானங்களை எடுப்பதோடு, ஆரோக்கியமான உறவுகளை பேணுவ தோடு, நோக்கத்துடன் வாழ்வார்கள்.

படிப்பிலோ, வேலையிலோ, குடும்பத்திலோ, சந்தோ ஷத்தையும் வெற்றியையும் நாம் விரும்பினால், முதலில் இச்சையடக்கத்தோடு, உள்ளான வாழ்க்கையில் சிறந்து விளங்கவேண்டும். கட்டுப்படுத்துவதைக் காட்டிலும் இருத யத்தை தேவ சித்தத்துடன் இசைய செய்ய வேண்டும். அப்போது அவரது திட்டங்கள் நம்மில் வாய்க்கும்.

சரியானவற்றுக்காக நீங்கள் நிற்கும்போது, தனிமை யாக நீங்கள் உணரலாம். ஆனால், பரலோகம் உங்கள் தைரியத்தை பாராட்டும். தேவ ஆவியானவர் அனுதின மும் உங்களை நிரப்பும்போது, உலகத்திற்கு 'முடியாது' என்று சொல்லும் ஒவ்வொரு தருணமும், உங்கள் வாழ்க்கை அவரது நோக்கத்திற்காக மகிமையுள்ள 'ஆம்' என்று மாறுவதை காண்பீர்கள்.



Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

CATEGORY 1 Institution UGC GoI | A++ NAAC | Accreditation: ACCA, NBA
Global Ranking: THE World University Rankings 2025 | India Rating: QS I-GAUGE Platinum | Global Rating: QS Stars

# ADMISSION OPEN '26

## When the Lights Dimmed, Love Spoke- Christmas @ Karunya Institutions


It began like every other December night - the air cool, the stars distant, and the campus quietly glowing. But something different was stirring at **Karunya Institutions**, Coimbatore.


By the time the first carol echoed, the ordinary had already slipped away. **The Annual Thanksgiving 2025** didn't just mark another **Christmas**; it became a story that will be remembered long after the lights fade. Hundreds of students, staff, and families stood as one, their voices and movements weaving a tapestry of faith, hope, and beauty. Under the serene presence of **Dr. Paul Dhinakaran**, Chancellor and Chairman of **JC**, and the founding family, the night took on a sense of divine stillness. Then came the moment the audience had been waiting for - **Megaplay 2025**, titled "**LAW - Love Always Wins**." The stage seemed to breathe - filled with music, motion, and emotion that spoke without words. Some called it a performance. Many called it a revelation.

Children from **Karunya Christian School** and **Evangeline Matriculation School** brought bursts of colour and joy, yet the real glow came later - when hearts spoke. Reflections flowed from **Dr. Paul Dhinakaran, Mrs. Evangeline Paul Dhinakaran, Mr. Samuel Dhinakaran, Ms. Sharon Dhinakaran, Mr. Daniel Davidson, Ms. Stella Ramola,** and finally, Bethany - the youngest voice of the evening. Her words were few, but the silence that followed said everything. What did she say that brought smiles through tears? What moment made the audience forget they were watching a play? Some questions can't be answered - they can only be felt. Watch the story unfold on Karunya University's Official **YouTube** Channel.

SCAN and WATCH







Programs Offered : ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE | HEALTH SCIENCES | DIGITAL SCIENCES | PHYSICAL SCIENCES | MEDIA | Online B.Com. / MBA

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888**

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process









SEESHA
LET'S GIVE LIFE

# புதிய ஆரம்பத்திற்காக புத்தாடைகள் வெகுமதி!



2025 டிசம்பர் 20ம் தேதி, சீஷாவின் 'கொடுப்பதே மகிழ்ச்சி' திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி அடையாறு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் நடந்தது. சிறுபிள்ளைகள் புன்னகையுடனும் எதிர்பார்ப்புடனும் கலந்து கொண்டனர். 1,200 சிறுபிள்ளைகள் புத்தாடைகளைப் பெற்று புத்தாண்டை திடநம்பிக்கையுடன் எதிர்கொள்ளுமாறு மகிழ்ச்சியடைந்தனர்.

Dr.டி.ஜி.எஸ்.தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் சீஷாவின் நிறுவனர் Dr.பால் தினகரன், தேசமெங்கும் வாழ்க்கையை மறுரூபமாக்கும் சிறுவர் மேம்பாட்டு திட்டத்தின் முக்கிய முயற்சியான புத்தாடை விநியோகத்தை தொடங்கி வைத்தார். தன் உரையில் Dr. பால் தினகரன், இளம்பிள்ளைகள் தங்கள் தாலந்துகளை வளர்த்து, கனவுகளை அடையும்படி தைரியப்படுத்தும் வார்த்தைகளை பகிர்ந்துகொண்டார்.

சீஷா நிறுவனரோடு இயேசு அழைக்கிறார், சீஷாவின் முதுநிலை நிர்வாகக் குழுவினரும் கலந்து கொண்டனர். சகோ. சாமுவேல் தினகரன், Dr. ஷில்பா தினகரனின் அன்பு பிள்ளைகள் கேட்லின் அன்னாவும் ஜேடன் கிறிஸ் தினகரனும் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டது மகிழ்ச்சிக்குரியதாக அமைந்தது.

தரமான கல்வி, சம வாய்ப்புகள், கல்வி உதவி தொகையுடன் நலிவுற்ற பின்னணி கொண்ட சிறுபிள்ளைகளுக்கு கற்றல் மையங்கள், ஆண்டுதோறும் ஸ்கூல் கிட்டுகள், புத்தாடை வழங்குவதன் மூலம் முழுமையான வளர்ச்சியை வழங்குவதில் சீஷா அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

சீஷா கற்றல் மையத்தின் பிள்ளைகள் நடனமாடினர். கேக் வெட்டுதல், திட்ட சமுதாயத்தினரின் பண்ணை உற்பத்தி பொருட்கள் ஏலம் ஆகியவை நடைபெற்றன.

'கொடுப்பதே மகிழ்ச்சி' நிகழ்ச்சி மூலம் நாடு முழுவதும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுபிள்ளைகள் கௌரவத்தையும், புதிய ஆரம்பத்தின் மகிழ்ச்சியையும் அனுபவித்தனர். பெலப்படுத்துதல், இந்தியா முழுவதும் நம்பிக்கையை விதைத்தல் என்ற சீஷாவின் பணியை உண்மையாக காட்டும் விதத்தில் இந்நிகழ்ச்சி அமைந்தது.

இந்த உன்னதமான முயற்சிக்கு நீங்களும் உதவி செய்யலாம்

- தேவையுள்ள 10 சிறுபிள்ளைகளுக்கு புத்தாடை வழங்க ரூ.5,000/-
- ஒரு சீஷா கற்றல் மையத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு புத்தாடை வழங்க ரூ.12,500/-


TAX-EXEMPTED

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
* When you Donate send the Details to +91 9300 600 600
SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045







**தேவ ஊழியத்தில் பங்காளராகுங்கள்**

நகர்ப்புற ஊழியத்தை தாங்கி நேரிலும் இணையவழியாகவும் பங்கேற்கிற லட்சக்கணக்கான ஆத்துமாக்களை ஆசீர்வதிக்கும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**இக்கூட்டங்களுக்கு என் ஆதரவு**

☐ 100 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.1,00,000/- ☐ 500 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.5,00,000/- ☐ 10 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.10,000/-

நான் ரூ................./- வழங்க விரும்புகிறேன்.

குடும்பமாய், நண்பர்களோடு வாருங்கள்; பாக்கியம் பெறுங்கள்.


STUDENTS PRAYER MEET
RISE & ROAR
JESUS CALLS
IN CHENNAI...
STUDENTS PRAYER MEET
+ SKIT + MUSIC + ACHIEVERS' EXPERIENCES & MUCH MORE...
2026 FEB 1
SUNDAY @ 2:00 PM
PRAYERS LED BY: DR. PAUL DHINAKARAN & FAMILY
VENUE: WINGS CONVENTION CENTER @
ST. GEORGE'S SCHOOL GROUND
POONAMALLEE HIGH ROAD,
NEAR PACHAIYAPPA'S COLLEGE METRO STATION, CHENNAI - 30.
CALL 9791934442 TO SHARE YOUR TESTIMONIES IN EXAM RESULTS AND GLORIFY GOD.
For more information please call:
99401 81188 / 89258 85686